


# சேர்க்கை நடைமுறைகளில் செய்யப்பட்ட புதுப்பிப்புகள்

## குடும்பங்களுக்கான தகவல்

## என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது?

(Kindergarten) முதல் ஆண்டு 12 (Year 12) வரை மாணவர் சேர்க்கை நடைமுறைகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் 2026 ஆம் ஆண்டு முதல் தவணை (Term 1) முதல் தொடங்கும் அனைத்து அரசுப் பள்ளி சேர்க்கைகளுக்கும் பொருந்தும்.

### உள்ளூர் அல்லாத சேர்க்கைகளுக்கான புதுப்பிப்புகள்

2025 ஆம் ஆண்டில், குறிப்பிட்ட கற்றல் மற்றும் நலன் (wellbeing) தேவைகள் கொண்ட மாணவர்கள், தற்போது பள்ளியில் படித்து வரும் மாணவர்களின் சகோதரர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களின் குழந்தைகள் ஆகியோரின் உள்ளூர் அல்லாத சேர்க்கை விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2026 ஆம் ஆண்டில், பின்வருபவர்களுக்கும் உள்ளூர் அல்லாத சேர்க்கைகளில் முன்னுரிமை வழங்கப்படும்:

- கலாச்சாரம், குடும்ப மற்றும் kinship connectionsஐ அங்கீகரிக்கும் வகையில் பூர்வீகக்குடி மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மாணவர்கள்.
- NSW அரசுப் பாடசாலையுடன் இணைந்து செயல்படும் அரசுப் முன்பள்ளியில் (preschool) கல்வி கற்று முடித்து Kindergarten சேரும் மாணவர்கள்.

### பாதுகாப்புப் படை பணியாளர்களின் பிள்ளைகளுக்கு அதிக நெகிழ்வுத்தன்மை

பாதுகாப்புப் படை பணியாளர்கள்  இடமாற்றம் செய்யப்படும் காலத்திலும் வாசிக்க வீடு ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் போது, அவர்களின் பிள்ளைகளின் பாடசாலை சேர்க்கை தேவைகளில் அதிக நெகிழ்வுத்தன்மை உறுதி செய்யும் வகையில் சேர்க்கை நடைமுறைகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

### பூர்வீகக்குடி மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு kinshipஐ அங்கீகரித்தல்

பூர்வீகக்குடி மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மாணவர்களை சேர்ப்பதில், kinship connections, கலாச்சார பாதுகாப்பு, பூர்வீகக்குடி மொழி கற்கும் வாய்ப்பு மற்றும் Sorry Business போன்ற கலாச்சார பொறுப்புகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பள்ளிகளுக்கு அதிக நெகிழ்வுத்தன்மை வழங்கப்படும்.

### மிகவும் பாதிக்கப்படக்கூடிய மாணவர்களுக்கான தொடர்ச்சி

பிணையில் உள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர் நீதி மையங்களில் உள்ள பாடசாலைகளிலிருந்து மாற்றம் பெறும் மற்றும் காவலில் உள்ள மாணவர்களுக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வகை மாணவர்களுக்கான உள்ளூர் பாடசாலை சேர்க்கை விண்ணப்பங்கள் இப்போது 2 பாடசாலை நாட்களுக்குள் செயலாக்கப்படும்.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## இந்த மாற்றங்கள் என் பிள்ளைக்கு பொருந்துமா?

NSW அரசுப் பாடசாலைகளில் சேர்க்கை நடைமுறைகளில் 2026 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மாற்றங்கள், பின்வரும் நிலைகளில் உங்கள் பிள்ளை இருக்கும்பட்சத்தில் பொருந்தும்:

- உங்கள் பிள்ளை, Kinship, மொழி அல்லது கலாச்சார அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டிய பூர்வீகக்குடி மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால்.
- உங்கள் பிள்ளை வீட்டிற்கு வெளியேயான பராமரிப்பில் (Out-of-Home Care) இருந்தால், பிணையில் இருந்தால் அல்லது இளையோர் நீதி மையத்தில் உள்ள பள்ளியிலிருந்து மாற்றம் பெறும் நிலையில் அல்லது காவலில் இருந்தால்.
- உங்கள் பிள்ளையின் பெற்றோரில் ஒருவர் பாதுகாப்புப் படையில் பணியாற்றியுள்ளார் அல்லது தற்போது பணியாற்றி வருகிறார், மேலும் ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் பணிபுரிவதால் ஏற்படும் இடமாற்றத் தேவைகளால் பாதிப்பிற்குள்ளானவராக இருந்தால்

## இந்த மாற்றங்களை ஒவ்வொரு பாடசாலையும் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டுமா?

பாடசாலையின் சேர்க்கை இடவசதி உள்ளதை பொறுத்து, 2026 ஆம் ஆண்டின் முதல் தவணையில் சேரும் உள்ளூர் அல்லாத மாணவர்களின் சேர்க்கைகளில் இந்த மாற்றங்களை பாடசாலைகள் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உள்ளூர் அல்லாத மாணவர்களுக்கான சேர்க்கை நடைமுறைகளில் செய்யப்படும் மாற்றங்கள், சிறப்பு அமைப்புகள் அல்லது திட்டங்களுக்கான தகுதி விதிமுறைகளை பாதிக்காது. இதில் முழுமையான தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள், குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பாடசாலைகள் (schools for specific purposes (SSPs)), தொலைக்கல்வி பாடசாலைகள், மேலும் குறிப்பிட்ட தகுதி தேவைகள் உள்ள வகுப்புகள் அல்லது திட்டங்கள் (உதாரணமாக, வாய்ப்பு வகுப்புகள், சிறப்பு விளையாட்டு மற்றும்/அல்லது படைப்பாற்றல் அல்லது நடிப்பு கலைப் பிரிவுகள்) அடங்கும்.  இந்த பாடசாலைகள் தங்களுக்கே உரிய நடைமுறைகள், தகுதி அளவுகோல்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கு உட்பட்டவை; மேலும் தற்போதுள்ள சேர்க்கை செயல்முறைகளையே தொடர்ந்து பின்பற்றும்.

ஒரே பாலினப் பாடசாலைகள், சேர்க்கை பெறும் பிள்ளை அந்த பாடசாலையின் பாலினத் தகுதி விதிமுறைகளை பூர்த்தி செய்தால், இந்த மாற்றங்களை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த மாற்றங்கள் எவ்வாறு பொருந்தும் என்பதை அறிய சம்பந்தப்பட்ட பாடசாலையை தொடர்புகொள்ளவும்.

## புதுப்பிக்கப்பட்ட தகுதி அளவுகோல்களை என் பிள்ளை பூர்த்தி செய்தால், உள்ளூர் அல்லாத சேர்க்கைக்கான என் விண்ணப்பம் தானாகவே ஏற்றுக்கொள்ளப்படுமா?

இந்த மாற்றங்கள், உங்கள் பிள்ளை உள்ளூர் அல்லாத அரசுப் பாடசாலையில் சேர்க்கை பெறுவதை உறுதி செய்யாது. உள்ளூர் மற்றும் உள்ளூர் அல்லாத சேர்க்கைக்கான இடவசதி உள்ள பாடசாலைகள், உங்கள் விண்ணப்பத்தை பரிசீலிக்கும்.  உள்ளூர் அல்லாத சேர்க்கைக்கான இடவசதி குறைவாக உள்ள பாடசாலைகள், கீழ்க்கண்டவற்றிற்காக உள்ளூர் அல்லாத சேர்க்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்:

- நியாயமான மாற்றங்கள் மற்றும்/அல்லது கூடுதல் கல்வி ஆதரவு தேவைப்படும் கற்றல் மற்றும் நலன் (wellbeing) தேவைகள் உள்ள மாணவர்கள், இதில் பின்வருபவை அடங்கும்:
  - கலாச்சார அம்சங்கள் மற்றும்/அல்லது குடும்பம் மற்றும் kinship connections மற்றும் உறவுகளை கொண்ட பூர்வீகக்குடி மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மாணவர்கள்
  - மாற்றுத்திறன் (Disability)
  - வளர்ச்சி வயது (Developmental age)
  - மன அதிர்ச்சி (Trauma)
  - குழந்தை பாதுகாப்பு தொடர்பான கவலைகள்
  - மருத்துவ மற்றும் தனிப்பட்ட தேவைகள் மற்றும் சூழ்நிலைகள்
- தற்போது பாடசாலையில் கற்கும் மாணவர்களின் சகோதரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது, மேலும் ஆதரவு பிரிவுகளில் உள்ள மாணவர்களின் சகோதரர்களுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- பாடசாலையுடன் இணைக்கப்பட்ட அரசு முன்பள்ளியில் கற்ற பிறகு Kindergarten-இல் சேரும் மாணவர்.

மேலும் தகவலுக்கு சம்பந்தப்பட்ட பாடசாலையை தொடர்புகொள்ளவும்.

## உள்ளூர் அல்லாத சேர்க்கைகளுக்கு முன்னுரிமை அளவுகோல்களை பூர்த்தி செய்யும் மாணவர்கள் மட்டுமே இனி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதுதான் இதற்கான அர்த்தமா?

இல்லை, உங்கள் பிள்ளை அந்த பாடசாலையில் சேர தகுதியுடையவர் மற்றும் பாடசாலையின் சேர்க்கை இடவசதிக்குள் பிள்ளையை ஏற்கக் கூடியிருந்தால் பெற்றோர் எந்த அரசுப் பாடசாலையிலும் சேர்க்க விண்ணப்பம் செய்யலாம். உள்ளூர் அல்லாத சேர்க்கைக்கான இடவசதி குறைவான அனைத்து பள்ளிகளும் புதுப்பிக்கப்பட்ட உள்ளூர் அல்லாத சேர்க்கை அளவுகோல்களைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை முன்னுரிமை அளித்து பரிசீலிக்க வேண்டும்.

## என் முந்தைய உள்ளூர் அல்லாத சேர்க்கை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது, ஆனால் தற்போது என் பிள்ளை புதுப்பிக்கப்பட்ட தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்கிறார் என்றால் நான் மீண்டும் விண்ணப்பிக்கலாமா?

ஆம். 2026 ஆம் ஆண்டில் உங்கள் பிள்ளையை உள்ளூர் அல்லாத பாடசாலையில் சேர்க்க விண்ணப்பித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், உங்கள் பிள்ளை புதுப்பிக்கப்பட்ட உள்ளூர் அல்லாத சேர்க்கைத் தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்தால் நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம். கீழே உள்ள “என் பிள்ளையை பதிவு செய்துள்ள பாடசாலையை நான் எவ்வாறு மாற்றுவது?” என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப் பின்பற்றவும்.

## Year 6 வகுப்பிலிருந்து 7ஆம் வகுப்பு மாற்றத்திற்காக நான் விருப்ப வெளிப்பாடு (Expression of Interest (EOI)) ஒன்றை சமர்ப்பித்துள்ளேன். நான் என் பிள்ளையை பதிவு செய்துள்ள பாடசாலையை மாற்ற முடியுமா?

ஆம். உங்கள் பிள்ளை புதுப்பிக்கப்பட்ட உள்ளூர் அல்லாத சேர்க்கைத் தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்தால், Year 6 வகுப்பிலிருந்து 7ஆம் வகுப்பு மாற்றத்திற்காக நீங்கள் ஏற்கனவே EOI சமர்ப்பித்திருந்தாலும், நீங்கள் விரும்பும் உள்ளூர் அல்லாத பள்ளிக்கு புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். கீழே உள்ள “என் பிள்ளையை நான் பதிவு செய்துள்ள பாடசாலையை எவ்வாறு மாற்றுவது?” என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப் பின்பற்றவும்.

## நான் என் பிள்ளையை பதிவு செய்துள்ள பாடசாலையை எவ்வாறு மாற்றுவது?

தங்கள் பிள்ளையை உள்ளூர் அல்லாத பாடசாலையில் சேர்க்க விரும்பும் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள், சேர்க்கையை மாற்ற கீழ்கண்ட படிகளை பின்பற்ற வேண்டும்:

**இணைய சேர்க்கை விண்ணப்பங்கள்**

1. நீங்கள் சேர்க்கைக்காக விண்ணப்பிக்க விரும்பும் அரசுப் பாடசாலையின் இணையதளத்திற்குச் சென்று, மெனுவில் உள்ள சேர்க்கை (enrolment) என்பதைக் கிளிக் செய்யவும்.
2. சேர்க்கை (Enrolment) இணையப் பக்கத்தில், ‘எவ்வாறு சேர்வது’ (how to enrol) என்ற தலைப்பின் கீழ் உள்ள இணைய சேர்க்கை விண்ணப்பம் (online enrolment application) என்ற இணைப்பை கிளிக் செய்யவும்.
3. சேர்க்கைக்கான உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம். அந்த கோரிக்கையை நீங்கள் 14 நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்கள் பிள்ளை முன்பு சேர்க்கப்பட்டிருந்த பாடசாலையை தொடர்புகொண்டு அந்த சேர்க்கையை ரத்து செய்யவும்.



NSW GOVERNMENT

**காகித விண்ணப்பப் படிவங்கள்**

1. உங்கள் பிள்ளையை சேர்த்துக் கொள்ள முடியுமா என்பதை அறிய, உள்ளூர் அல்லாத அரசு பாடசாலையை தொடர்புகொள்ளவும்.
2. அந்த பாடசாலை உங்கள் பிள்ளையை சேர்த்துக்கொள்ள முடியும் என்றால், பாடசாலை வழங்கும் புதிய காகித விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும்.
3. சேர்க்கைக்கான உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம். அந்த கோரிக்கையை நீங்கள் 14 நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்கள் பிள்ளை முன்பு சேர்க்கப்பட்டிருந்த பாடசாலையை தொடர்புகொண்டு அந்த சேர்க்கையை ரத்து செய்யவும்.

## எனக்கு நிரந்தர முகவரி அல்லது தேவையான அடையாள ஆவணங்கள் இல்லையெனில் என்ன செய்வது?

சில சூழ்நிலைகளில், முகவரி சான்று இல்லாமலேயே ஒரு மாணவரை பாடசாலையில் சேர்க்க முடியும். இந்த சூழ்நிலைகளில் (பின்வருபவை உட்பட ஆனால் அவை மட்டும் அல்ல) கலாசார காரணங்கள், பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் பிள்ளைகள், மேலும் வீட்டிற்கு வெளியேயான பராமரிப்பில் (out-of-home care) உள்ள பிள்ளைகள் , பிணையில் உள்ளவர்கள், அல்லது இளைஞர் நீதிக் மைய பள்ளிகளிலிருந்து மாற்றம் பெறும் மற்றும் காவலில் உள்ள மாணவர்கள் ஆகியோர் அடங்குவர். இவை உங்கள் நிலைக்கு பொருந்தக்கூடும் என நீங்கள் நினைத்தால், கூடுதல் தகவல்களுக்காக சம்பந்தப்பட்ட பள்ளியை தொடர்புகொள்ளவும்.

## 2025 ஆம் ஆண்டின் சேர்க்கை கொள்கை மற்றும் நடைமுறை மாற்றங்கள் இன்னும் பொருந்துமா?

ஆம். 2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் 2026 ஆம் ஆண்டிற்கான சேர்க்கைகளுக்கும் தொடர்ந்து பொருந்தும். அவை பின்வருமாறு:

- தற்காலிக வதிவிட விசா (Temporary resident visa) கொண்ட அனைத்து மாணவர்களும், தங்களின் வதிவிட முகவரியை அடிப்படையாகக் கொண்டு, உள்ளூர் அரசு பள்ளியில் சேரலாம்.
- அரசு பள்ளியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் சகோதரர்/சகோதரிகள், உள்ளூர் அல்லாத முன்னுரிமை பெறுவர். இதில், தகுதியான முதன்மை (mainstream) பள்ளிகளில் உள்ள ஆதரவு வகுப்புகளில் (support classes) பயிலும் மாணவர்களின் சகோதரர்/ சகோதரிகளுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கப்படும்.
- பள்ளி பணியாளர்களின் பிள்ளைகள், அரசு பள்ளியில் உள்ளூர் அல்லாத சேர்க்கைக்காக பரிசீலிக்கப்படலாம்.

இந்த மாற்றங்கள் குறித்து மேலும் தகவல்களை அறிய, அல்லது அவை உங்கள் பிள்ளைக்கு பொருந்துமா என்பதை சரிபார்க்க, சம்பந்தப்பட்ட பள்ளியை தொடர்புகொள்ளவும்.

## மேலும் தகவல்களை எங்கு பெறலாம்?

**சேர்க்கை தொடர்பான கேள்விகளுக்கு, நீங்கள் விரும்பும் பள்ளியுடன் பேசவும். உங்கள் பள்ளியின் தொடர்பு விவரங்களை இங்கே காணலாம்:**
education.nsw.gov.au/find-a-public-school

**NSW அரசு பள்ளியில் எவ்வாறு சேர்வது என்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு:**
education.nsw.gov.au/enrolment

**தற்காலிக வதிவிட உரிமை கொண்டவர்கள் (Temporary Resident) NSW அரசு பள்ளியில் சேர்வது குறித்த கூடுதல் தகவல்களுக்கு:**
https://www.deinternational.nsw.edu.au/

**சேர்க்கை தொடர்பான பொதுவான கேள்விகளுக்கு, கல்வித் துறை (Department of Education) தலைமையகத்தை தொடர்புகொள்ளவும்:** 1300 679 332

**தொலைபேசி உரைப்பெயர்ப்பு சேவை (Telephone Interpreter Service)**

ஒரு பள்ளி அல்லது கல்வித் துறையை தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், 13 14 50 என்ற எண்ணில் தொலைபேசி உரைப்பெயர்ப்பு சேவையை அழைத்து, உங்கள் மொழிக்கான உரைப்பெயர்ப்பாளரை கேட்கவும். நீங்கள் தொடர்புகொள்ள விரும்பும் தொலைபேசி எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் தெரிவிக்கவும். அவர் உரையாடலுக்கு உதவ ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் எந்தக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது.